# பழமுதிர்சோலை பரமகுரு கவசம்

## குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குக் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே - 4

**பழநி மாமலையுறும் பன்னிரு கரத்தனே**
**அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்**
**சரவணபவனே சட்கோணத் துள்ளுறை**
**அரனருள் சுதனே அய்யனே சரணம்** - 8

சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம் - 12

**திகழொளி பவனே சேவல்கொடியாய்**
**நகமா யுதமுடை நாதனே சரணம்**
**பரிபுர பவனே பன்னிரு கையனே**
**தருணமிவ் வேளை தற்காத் தருளே - 16**

சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவணபவனே - 20

**குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்**
**தஞ்ச மென்றுன்னைச் சரணம் அடைந்தேன்**
**கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங் (கு)**
**அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு - 24**

கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ (டு) ஒன்பான் - 28

**தம்பிமா ராகத் தானையைக் கொண்ட**
**சம்பிர தாயா சண்முகா வேலா**
**நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்**
**கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப் - 32**

பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்க
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை - 36

**அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே**
**மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்**
**விமலனும் கேட்டு வேக மதாக**
**உமையுடன் வந்தினி துவந்து பரிந்து - 40**

அயனைச் சிறைவிடென் (று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே ...
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைம களுடனே - 44

**அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல**
**ஆறு முகத்துடன் அவதரித் தோனே**
**சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்**
**பங்கமே செய்யும் பானு கோபனும் - 48**

சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச் - 52

**சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்**
**தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெரும ...**
**திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்**
**சிறப்புறு பழநி திருவேரக முதல் - 56**

எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென் (று) ஓதினார் சமயம் அறிந்தங் (கு) - 60

**இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா**
**கும்பமா முனிக்குக் குருதே சிகனே**
**தேன்பொழில் பழனி தேவ குமாரா**
**கண்பார்த் (து) எனையாள் கார்த்திகே யாஎன் - 64**

கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட் சுமிவாழ் அருளெனக் குதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்

திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே - 68

**அருணகிரி தனக் (கு) அருளிய தமிழ்போல்**
**கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்**
**தேவ ராயன் செப்பிய கவசம்**
**பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட - 72**

சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே - 76

**சரணம் சரணம் சரஹண பவஓம்**
**சரணம் சரணம் தமிழ் தரும் அரசே**
**சரணம் சரணம் சங்கரன் சுதனே**
**சரணம் சரணம் சண்முகா சரணம். - 80**

**குன்றாத குடிவாழ்க்கை தந்தருளும்**
**மயூரகிரிநாதனுக்கு அரோகரா**